## 28. உளையான சேற்றில் இருந்த

### பல்லவி

உளையான சேற்றில் இருந்த என்னை
தூக்கி எடுத்தீரே
கன்மலைமேல் எந்தன் பாதங்களை
கழுவி நிறுத்தினீரே

### அனுபல்லவி

*உம் அன்பு ஒன்றே போதுமையா*
*இதைவிட வேறொன்றும் வேண்டாமையா*

### சரணங்கள்

1. பெலவீனமான என்னை பெலனான
உந்தன் ஊழியத்தை செய்ய வைத்தீரே
- உம் அன்பு

2. பைத்தியமான என்னை ஞானமான
உந்தன் வார்த்தைகளை பேச வைத்தீரே
- உம் அன்பு

3. கனவீனமானவனை என்னை கனமான
உந்தன் புது பாடலை பாட வைத்தீரே
- உம் அன்பு